**அனுப்புநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் இணை இயக்குநர் (கல்வி)
புதுச்சேரி.

**ந.க.எண். 011220/F1/2021** **நாள் : 06 .08.2021**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வுகள் செப்டம்பர் 2021 – தனித்தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் வாயிலாக ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – சேவை மையங்களுக்கு அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை:** இவ்வலுவலக இதே எண்ணிட்ட செய்திக் குறிப்பு, நாள். 06.08.2021.

–––––

பார்வையில் காணும் இவ்வலுவலக செய்திக் குறிப்பில், நடைபெறவிருக்கும் செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வெழுத, ஆன்–லைன் வழியாக விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள், **07.08.2021 காலை 11.30 மணி முதல் 11.08.2021 வரையிலான நாட்களில் (07.08.2021 தவிர மற்ற நாட்களில் காலை 10.00 மணி முதல் 05.45 மணி வரை – 08.08.2021 ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக)** கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centres) நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தனித்தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் **12.08.2021 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை** விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில், தனித்தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு **07.08.2021** முதல் வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகை புரிவோரது விண்ணப்பங்களை கீழ்க்கண்டவாறு ஆன்–லைன் மூலம் பதிவேற்றம் செய்வது தொடர்பாக, தங்களது ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் சேவை மையங்களின் (Government Examinations Service Centres) தலைமையாசிரியர்களுக்கு பின்வரும் அறிவுரைகளை வழங்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, Click here to access Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்த பின்னர் திரையில் தோன்றும் HSE FIRST YEAR / SSLC SUPPLEMENTARY EXAM - PRIVATE APPLICATION என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றிருக்கும் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வுகளுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல் தொடர்பாக சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள் மற்றும் +1 பழைய பாடத் திட்டத்திற்கு இணையாக புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்கள் (+1 Equivalent Subjects) தொடர்பான பட்டியல் ஆகியவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

2. பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் மற்றும் அதன் இணைப்புப் பட்டியல் ஆகியவற்றை சேவை மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டவேண்டும்.

3. **07.08.2021 காலை 11:30 மணி முதல்** சேவை மையங்களுக்கு வருகை புரியும் தனித்தேர்வர்களிடம் உரிய ஆவணங்களைப் பெற்று, சேவை மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4. சேவை மையங்களில் 07.08.2021 (சனிக்கிழமை) முதல் 11.08.2021 (புதன்கிழமை) வரையிலான நாட்களில் பெறப்பட்டு பதிவு செய்த விண்ணப்பங்களையும், சிறப்பு அனுமதித் திட்டத்தின் கீழ் 12.08.2021 அன்று பெறப்பட்டு பதிவு செய்த விண்ணப்பங்களையும், தனித்தனி கட்டுகளாக தேர்வு வாரியாக பிரித்துக் கட்டி, அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 13.08.2021 அன்று ஒப்படைக்குமாறு சேவை மையங்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

5. அவ்வாறு விண்ணப்பங்களை ஒப்படைக்கும் பொழுது, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத்தேர்விற்கு விண்ணப்பித்த தனித்தேர்வர்களது விவரங்களடங்கிய பட்டியலுடன், தனித்தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையினையும் (தக்கல் கட்டண தொகையினையும் சேர்த்து), விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை x ரூ.50/– எனக் கணக்கிட்டு பெறப்பட்ட ஆன்–லைன் கட்டணத் தொகையினையும் தேர்வு வாரியாக தனித்தனியாக பிரித்து, **13.08.2021** அன்று அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் நேரில் ஒப்படைக்குமாறு சேவை மையங்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

மேலும், ஆன்–லைனில் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சேவை மையங்களுக்கான அறிவுரைகள், தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் மற்றும் +1 இணைப்பாடங்கள் (+1 Equivalent Subjects) குறித்த பட்டியல் ஆகியவை இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. சேவை மையங்களுக்கான அறிவுரைகளைப் பின்பற்றியே தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும், விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சந்தேகங்கள் ஏதேனும் எழும்பட்சத்தில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களையும், கீழ்க்குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்களையும் தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் சேவை மையங்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

[redacted]

ஒம்/–

**இயக்குநர்**

**இணைப்பு :**

1. சேவை மையங்களுக்கான அறிவுரைகள் – 2
2. தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் – 2
3. +1 பழைய பாடத் திட்டத்திற்கு இணையாக
   புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களின் பட்டியல் – 1

**நகல்**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகவும், உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும்
   நகல் அனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – தகவலுக்காக